**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.21.08.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.3 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 21.08.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு. மணி** | **இனம்** | **ஆண்** |
| **த/பெ.** | **சூலபாணி** | **ஊர்/வட்டம்** | **கத்தாரிக்குப்பம்/வாலாஜா** |
| வயது | 70/2025 | **தொழில்** | **விவசாய கூலி** |

துவக்க நேரம் 12.20 PM

**சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எனது சொந்த ஊர் எதுவென்றால் கத்தாரிக்குப்பம். எவ்வளவு நாட்களாக இந்த ஊரில் நான் வசித்து வருகிறேன் என்றால் பிறந்ததிலிருந்தே இந்த ஊரில்தான் வசித்து வருகிறேன். எனது என்ன வயது என்றால் 70 வயதாகிறது. எனக்கு, 1ம் பிரதிவாதி வேதாத்திரியின் தாத்தா வேதாத்திரியை தெரியுமா என்றால் தெரியாது.

2. 1ம் பிரதிவாதி வேதாத்திரியின் தாத்தா வேதாத்திரிக்கு கத்தாரிக்குப்பத்தில் எவ்வளவு சொத்து இருந்தது என்றால் தெரியாது. முனுசாமி ஏக்.0.55 1/2 செண்ட்டை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் கண்ணன் என்பவர், எனது அண்ணனிடம் வாங்கினேன் என்று என்னிடம் சொன்னார். கண்ணனின் அண்ணன் பெயர் என்னவென்றால் முனுசாமி.

3. முனுசாமி வாங்கிய சொத்திற்கு அருகில் கண்ணனுக்கு சொத்து உள்ளது என்றால் ஆமாம். முனுசாமி வாங்கிய சொத்தை கண்ணன் தனது சொத்துடன் சேர்ந்த்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். முனுசாமி வாங்சிய ஏக்.0.55 1/2 நிலத்தை தவிர வேறு ஒரு ஏக்.0.55 1/2 நிலம் அங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. நான் முனுசாமியை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அப்பொழுது எனக்கு சிறு வயது. தாவாவில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரண சொத்து ஏக்.0.55 1/2 நிலம் என்றால் சரிதான். தாவா சொத்தின் 4 எல்லைகள், பாட்டைக்கு கிழக்கு, முனுசாமி கிரயம் பெற்ற நிலத்திற்கு மேற்கு, கோதண்ட உடையார் நிலத்திற்கு தெற்கு, கோவிந்தராஜ் நிலத்திற்கு வடக்கு இதன் மத்தியில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. தாவா சொத்து கத்தாரிக்குப்பத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். உயில் எழுதும்பொழுது நான் பக்கத்தில் இருந்தேனா என்றால் கண்ணன் எனக்கு சொன்னார். என்னிடம் கண்ணன் உயில் தகவலை எப்பொழுது சொன்னார் என்று குறிப்பாக தெரியாது. கண்ணன் எப்பொழுது இறந்தார் என்றால் இப்பொழுதிலிருந்து சுமார் 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

6. தாவா சொத்து 1ம் பிரதிவாதி வேதாத்திரிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் திருமாறன் என்னை அழைத்து வந்தார்.

7. நான் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள எழுத்துமூல சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் எழுத்துமூல சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் திருமாறனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 12.40 PM

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.